# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 25 செவ்வாய்க்கிழமை 09.07.2024 கதிர் 295







# வாக்குகள் மூலம் வெற்றி பெற முடியாத தற்போதைய தலைவர் அரசியலமைப்பில் ஓட்டைகளை தேடும் நபராக மாறியுள்ளார்!

## திருடர்களைப் பாதுகாக்கவே இத்தனை ஆர்வம் என்கிறார் சஜித் பிரேமதாச

மக்கள் ஆணையோ, மக்களின் நம்பிக்கையோ இல்லாத மற்றும் வாக்குகள் மூலம் வெற்றிபெற முடியாத நாட்டின் தற்போதைய தலைவர் அரசியலமைப்பில் ஓட்டைகளை தேடும் நபராக மாறியுள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

இவர்களால் நாட்டைக் கட்டியெழுப்பவோ, அபிவிருத்தி செய்யவோ முடியாது, நாட்டை மாற்ற வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு கிடையாது. அரசியலமைப்பில் உள்ள ஓட்டைகளுக்குள் நுழைந்து, ஆட்சியை தக்க வைத்து தமது கூட்டாளிகளை பாதுகாப்பதே அவர்களின் நோக்கமாகும்.

2➤





## தொழிற்சங்க சுகவீன விடுமுறைப் போராட்டம் இன்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது

நாடளாவியரீதியில்200 இற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கும் சுகவீன விடுமுறைப் போராட்டம் இன்று செவ்வாய்க்கிழமை இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

இந்தப் போராட்டத்தில் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் சங்கத்தினரும் இணைந்துகொண்டனர். இதன் காரணமாக பாடசாலைகளில் வழமையான கல்வி நடவடிக்கை முற்றிலும் பாதிக்கப்பட்டது.

அதேநேரம் நாடளாவிய ரீதியில் பாடசாலைகளின் வழமையான கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படும் எனக் கல்வி அமைச்சு தெரிவித்திருந்த நிலையில் இன்று வழமைபோல் பாடசாலைகளுக்குச் சென்ற மாணவர்கள் சென்றவுடன் திரும்பிய நிலையை அவதானிக கக் கூடியதாக இருந்தது.

நீதிமன்றம், வைத்தியசாலை போன்றன வழமை

2➤

## சுகாதார ஊழியர்களுக்கு நீதியை வழங்க தாமதமானால் தொழிற்சங்க நடவடிக்கைகளில் நாமும் பங்கு கொள்வோம்!

### சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு கடிதம்

சுகாதார ஊழியர்களுக்கு பொருளாதார நீதியை பெற்றுக்கொடுப்பதற்கான இணக்கப்பாடுகள் மேலும் தாமதமானால், தொழிற்சங்கங்கள் முன்னெடுக்கும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு தமது கூட்டமைப்பும் ஆதரவளிக்க தீர்மானிக்கும் என சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஜனாதிபதிக்கு நேற்று (08) கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

சுகாதார ஊழியர்களுக்கு பொருளாதார நீதியை அடைவது தொடர்பான அறிக்கையின் படி முதல் பகுதியை செலுத்திய பின்னர் அடுத்த கட்டமாக மீதமுள்ள பகுதியை செலுத்துவதற்கு அரசாங்கம் உறுதியளித்த போதிலும்




இதுவரையில் அதற்கான சாதகமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனவும் கூட்டமைப்பின் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும், பல்வேறு தரப்பினருக்கு

2➤



## தமிழரசின் எம்.பியானார் குகதாசன்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக கதிரவேலு சண்முகம் குகதாசன் இன்று சபாநாயகர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 9.30 மணிக்குச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது. இதன்போதே அவர் உறுதியேற்றார்.

சபாநாயகர் முன்னிலையில் இன்று அவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் நாடாளுமன்ற செயலாளர்

2➤

### சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின்

# புதிய பதில் வைத்திய அத்தியட்சகராக ரஜீவ்



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் புதிய பதில் வைத்திய அத்தியட்சகராக வைத்தியர் கோபாலமூர்த்தி ரஜீவ் இன்று கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

சுகாதார அமைச்சின் கடிதத்துக்கமைய வைத்தியசாலையில் இன்று நடைபெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் சமன் பத்திரண, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் முன்னிலையில் புதிய பதில் வைத்திய அத்தியட்சகர் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகராக இருந்த இராமநாதன் அர்ச்சுனாவை மாற்றக் கோரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இந் நிலையில், பதில் வைத்திய அத்தியட்சகருக்கு ஆதரவாக தென்மராட்சி பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்களின் ஏற்பாட்டில் நேற்று பாரிய போராட்டம் நடத்தப்பட்ட நிலையில், பதில் வைத்திய

2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## தொழிற்சங்க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போல் இயங்கின. ஆனால், மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், விவசாய திணைக்களம், தேர்தல் திணைக்களம் போன்ற அரச திணைக்களங்கள் ஊழியர்கள் வருகை குறைவால் மந்தகதியில் இயங்கியமையும், இந்தத் திணைக்களங்களில் சேவையைப்பெற்றுக்கொள்ள வந்தவர்கள்ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது. (05)

## புதிய பதில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா சுகவீன விடுமுறை எனத் தெரிவித்து கொழும்புக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (05)

## சுகாதார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொடுப்பனவு வழங்கும் முறைகளை அரசாங்கம் தற்போது செயற்படுத்தி வருவதால், சுகாதார ஊழியர்களுக்கு பொருளாதார நீதி வழங்குவதில் பொருளாதாரச் சிக்கல்களை எதிர் நோக்குவதாக அரசாங்கம் கூறுவதில் உண்மையில்லை என்பது உறுதியாகியுள்ள நிலையில், தமது தொழிற்சங்க கூட்டமைப்புடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த தலையிடுமாறு கோரி சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ரவி குமுதேஷ் கையொப்பமிட்ட கடிதத்தின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ரெஜ-23)

## வாக்குகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இவர் நியமனம் பெற்ற ஜனாதிபதியே அன்றி மக்கள் வாக்குகளால் அதிகாரத்திற்கு வந்தவர் அல்ல. சாதாரண மக்கள் மீது இவருக்கு எந்தவொரு அனுதாபமும் உணர்வும் இல்லை, இவரது நோக்கம் எல்லாமே தம்மை ஆட்சி அதிகாரத்திற்கு கொண்டு வந்த நாட்டை அழித்த திருடர் கூட்டத்தை பாதுகாப்பதே ஆகும் எனவும் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார்.

கம்பஹாவில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் 'ஜன பவுர ' எனும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "தற்போதைய அரசாங்கம் தோற்கடிக்கப்பட்ட ஒரு அரசாங்கமாகவும், ஊழல்மிக்கதாகவும், மக்கள் ஆதரவற்றதாகவும் இருப்பதால் சதி வேலைகள் மற்றும் ஏமாற்று அரசியல் மூலம் 365 நாட்களும் 24 மணி நேரமும் பொய்களை கூறி, பொய்யான அறிக்கைகள் - செய்திகள் மூலம் மக்களை ஏமாற்ற திட்டமிடுவதுடன், மோசடி கும்பலுடன் இணைந்து இந்த ஜனாதிபதி அரசியலமைப்பை மீறுவதாகவும், இத்தகைய இழிவான சதிவேலைகள் மக்கள் பலத்தால் தோற்கடிக்கப்படும்!" என்றார்.

இவ்வாறானவர்கள் மக்களின் முன் வருவதற்கு அஞ்சுவதாகவும், வரலாற்றில் முதல் தடவையாக இடதுசாரி மற்றும் வலதுசாரி சக்திகள், சிங்கள - தமிழ் - முஸ்லிம் - பறங்கியர் ஆகிய அனைவரும் ஐக்கிய மக்கள் சக்தியை சுற்றி அணி திரண்டுள்ளதாகவும், இன வேறுபாடுகளை கடந்து மக்களுக்கான ஓர் அரசாங்கம் கட்டியெழுப்பப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார். (ரெஜ-22)

## தமிழரசின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாயகம் குஷானி ரோஹணதீர முன்னிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஏட்டிலும் அவர் கையொப்பமிட்டார்.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்தலைவர் இரா. சம்பந்தனுடைய இழப்பை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்காக விருப்பு வாக்கின் அடிப்படையில் இரண்டாவது நிலையில் இருக்கின்ற கதிரவேலு சண்முகம் குகதாசன் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கதிரவேலு சண்முகம் குகதாசன் கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் இந்தியாவின் மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உயர் கல்வியைப் பெற்றுள்ளார்.

1975ஆம் ஆண்டு முதல் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் உறுப்பினராக இருந்து 2018 ஆம் ஆண்டு முதல் கட்சியின் திருகோணமலை மாவட்டத் தலைவராகப் பணியாற்றி வருகின்றார். தேசிய கொள்கை, பொருளாதார விவகாரங்கள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் கிழக்கு மாகாண அபிவிருத்தி அலுவல்கள் இணைப்பாளராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

மேலும், 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து அவர் போட்டியிட்டிருந்தார். (05)

# இறப்பர் தோட்டத்தில் மாணவியின் சடலம்

முகத்தில் இரத்தக் கறையுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் இறந்து கிடந்த 16 வயது சிறுமியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. ரத்னபுர, நிவித்திகல இறப்பர் தோட்டத்துக்கு அருகில் உள்ள நடைபாதையில் இருந்து நேற்று சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 16 வயதுடைய பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவர் வடாபொத, யோவுன் கிராமம் பகுதியில் வசித்து வந்துள்ளார். இறந்தவரின் தாயார் வடாபொத கோயிலுக்கு அருகில் கடை நடத்தி வருவதோடு, சம்பவ தினத்தன்று மாணவி பாடசாலைக்குச் செல்லாததால் வீட்டில் தனியாக இருந்துள்ளார். இதையடுத்து அந்த மாணவியைக் கடைக்கு வருமாறு தாய் தொலைபேசி அழைப்பொன்றை வழங்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடைக்குச் செல்வதில் தாமதம் ஏற்பட்டதால், கடையில் இருந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த தாய், இறப்பர் தோட்டத்தின் நடுவில் உள்ள நடைபாதையில் சென்று கொண்டிருந்தபோது, சந்தேகத்துக்குரிய வகையில் சிறுமியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இந்நிலையில், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிவித்திகல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# அலி சப்ரி ரஹீமுக்குப் பிடியாணை

*புத்தளம்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமை உடனடியாகக்கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு புத்தளம் மேலதிக மாவட்ட நீதிபதியும் நீதிவானுமான அயோனா விமலரத்ன இன்று பிடியாணை பிறப்பித்துள்ளார்.*

*கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருஞ்சாம்பிட்டிய பகுதியில் உள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்றுக்குச் சொந்தமான கட்டடமொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து சொத்துக்களைச்சேதப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் அலி சப்ரி ரஹீமுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

*இதற்கு முன்னரும் அலி சப்ரி ரஹீம் இந்த வழக்கு தொடர்பான விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்துள்ளதுடன் அவர் சார்பில் சட்டத்தரணியும் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.*

*(05)*



# அடுத்த வருடம் முதல் வெளிநாட்டு ஆராய்ச்சிக் கப்பல்களை அனுமதிக்க இலங்கை தீர்மானம்

அடுத்த வருடம் முதல் வெளிநாட்டு ஆராய்ச்சிக் கப்பல்களை இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசிப்பதற்கான அனுமதியை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. சீனக் கப்பல்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் பிரவேசிப்பதை இலங்கையால் தடுக்க முடியாது எனவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜப்பான் தொலைக்காட்சியொன்றில் நடத்திய கலந்துரையாடலில் தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டில், இந்திய மற்றும் அமெரிக்க வணிக சீன ஆராய்ச்சிக் கப்பல்கள் இலங்கையின் கடல் பகுதிக்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை. 2023 ஆம் ஆண்டிலும், 2022 ஆம் ஆண்டிலும், சீன ஆராய்ச்சிக் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்திற்கு வருவதைப் பற்றி இந்திய அரசாங்கம் கவலை தெரிவித்திருந்தது.

எனினும், ஒவ்வொரு நாட்டையும் கருத்தில் கொண்டு அந்நாடுகளின் கடற்படை கப்பல்களுக்கு தடை விதிக்க முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெஜ-25)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# ஆறாவது தடவையாக கிண்ணத்தைச் சுவீகரித்தது மட்டு வின்சன்ட் மகளிர் தேசிய பாடசாலை அணி






(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பின் பாடுமீன்களின் சமர் என வர்ணிக்கப்படும் மகளிர் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் சிசிலியா பெண்கள் தேசியப் பாடசாலை அணியை வீழ்த்தி வின்சன்ட் மகளிர் தேசியப் பாடசாலை அணி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியது.

மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் 11 ஆவது வருடமாக நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மட்டக்களப்பு சிசிலியா பெண்கள் தேசியப் பாடசாலை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது. இந்நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வின்சன்ட் மகளிர் பாடசாலை 19.2 ஓவர்களில் ஆறு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது

இந்நிகழ்வில் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார், மட்டக்களப்பு கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி சாமினி ரவிராஜ், எம்.ஹரிகரராஜ், வின்சன்ட் மகளிர் தேசிய பாடசாலை அதிபர் தவத்திருமகள் உதயகுமார், பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

# சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் புனித முஹர்ரம் புது வருட நிகழ்வு



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஹர்ரம் 1446 ஆம் ஆண்டு புதுவருடத்தை சிறப்பித்து வரவேற்கும் முகமாக சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜ/ம்ஆப் பெரிய பள்ளிவாசலில் சிறப்பு பயான் நிகழ்வொன்று நேற்று திங்கட்கிழமை (08) இரவு ஏற்பாடு செய்யப்பட்டது. சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜ/ம்ஆப் பெரிய பள்ளிவாசலின் தலைவர் ஏ. ஹிபத்துல் கரீம் தலைமையில், ஓய்வுபெற்ற ஆசிரியரும், பொறுப்புதாரியுமான மௌலவி எம்.எஸ்.எம் நுஃமான் (நளீமி)யின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்வில், சம்மாந்துறை சூறா கவுன்சில் தலைவரும் முன்னாள் சிரேஷ்ட நிர்வாக அதிகாரியுமான அஷ்ஷேக் எம்.ஐ.எம். அமீர் (நளீமி) விசேட பேச்சாளராகக் கலந்து கொண்டார்.

சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜ/ம்ஆப் பெரிய பள்ளிவாசலின் செயலாளர் மற்றும் பொருளாளர், அதன் பொறுப்புதாரிகள் உட்பட உலமாக்கள், வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் ஜமாஅத்தார்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். இதன்போது பள்ளிவாசலின் பேஸ் இமாமினால் விசேட துஆப் பிரார்த்தனை மேற்கொள்ளப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.




## கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகாவித்தியாலய மாணவத் தலைவர்களுக்கு சின்னஞ் சூட்டல் நிகழ்வு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை இஸ்லாமாபாத் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் மாணவத் தலைவர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு பாடசாலை அதிபர் ஏ.ஜி. எம். றிசாத் தலைமையில் நேற்று (8) இடம்பெற்றது.

2024 ஆம் கல்வியாண்டிற்கான மாணவத் தலைவர்களை தெரிவு செய்யும் தகுதிகாண் காலத்தில் உரிய தகைமைகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கே இவ்வாறு சின்னங்கள் சூட்டப்பட்டன.

பாடசாலையின் ஒழுக்காற்று குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதல் சின்னத்தை அதிபர் றிஸாத் சிரேஷ்ட மாணவத் தலைவருக்கு சூட்டியதுடன் பிரதி அதிபர்கள், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள் ஏனைய மாணவத் தலைவர்களுக்கு சின்னங்களைச் சூட்டினார்கள்.

# கதிர்காமக் கந்தனை நோக்கி கானக வழி பாதயாத்திரை

**அனுபவப் பதிவு – விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா**





வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல்விழா உற்சவத்திற்காக வரலாற்றில் முதல் தடவையாக அதிகப்படியான யாத்திரீகர்கள் கானக பாதயாத்திரையை மேற்கொண்டு வருகின்றனர்.

வரலாற்றில் கானகப் பாதை திறந்த முதல் நாளில் சுமார் 7000 பாதயாத்திரீகர்கள் பயணித்தமை இதுவே முதல் முறையாகும்.

அதேபோல உகந்தை முருகனாலய கொடியேற்றம் இடம்பெற்ற கடந்த ஆறாம் திகதி கானகத்தில் பிரவேசித்த அடியார்களின் எண்ணிக்கை சுமார் 10,000 ஆகும். இதுவும் ஒரு வரலாற்றுப் பதிவாகும்.

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பித்த சி.ஜெயராசா தலைமையிலான 56 நாள் மிகநீண்ட பாதயாத்திரை அடியார்கள் மற்றும் மாமாங்கேஸ்வரர் யாத்திரை குழுவினர் உள்ளிட்ட அடியார்களும் கலந்து கொண்டார்கள்.

இம்முறை வழமைக்குமாறாக சிங்கள அடியார்களின் எண்ணிக்கை கூடுதலாக இருந்தது. இவர்களோடு படையினர், ஆராய்ச்சியாளர்கள் என பலரும் கலந்து கொண்டார்கள். இந்து பக்தர்கள் பெரும்பாலும் காவி உடை தரித்தே காணப்பட்டார்கள். ஆனால், ஏனைய அடியார்கள் சப்பாத்து கண்ணாடி நாகரீக உடைகளோடு ஒரு சுற்றுலாப் பாணியில் இருந்தனர்.





வெளிநாட்டவர்கள் சிலரும் கூடவே பயணித்தார்கள். இடையில் பரவலாக அன்னதானம் வழங்கப்பட்டது. தண்ணீரை சிவ தொண்டன் அமைப்பு, சேவற்கொடியோன் அமைப்பு ஸ்பான்ட் அமைப்பு என பல தரப்பினரும் வழங்கினர். சந்நதி மோகன் சுவாமி மற்றும் ஞானம் லைக்கா அமைப்பினர் முதல் நாள் பக்தர்களுக்கான உலருணவுகளை வழங்கினர்.

மேலும் குளிர்பானங்கள், தேநீர், பால், பிஸ்கட் தாம்பூலம் போன்றவற்றை வெளிநாடு வாழ் அன்பர்களின் அனுசரணையுடன் சமூக சேவையாளர் ஜெயசிறில் வழங்கி வைத்தார். இப்படி பல பரோபகாரிகள் உதவி செய்தார்கள். நாவலடியில் வழமைபோல வைத்திய கலாநிதி டொக்டர் அழகையா லதாகரனின் மருத்துவ முகாமும் சிறப்பாக நடைபெற்றது.

வியாழை நதிக் கரையோரம் இம்முறை கூடுதலான பக்த அடியார்களால் களைகட்டியது. ஆனால், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கூடும் அந்த இடத்தில் போதுமான தண்ணீர் வசதி, பாதுகாப்பு வசதி மேற்கொள்ளப்படவில்லை என்பது பக்தர்களின் குற்றச்சாட்டாகும்.

கதிர்காம காட்டுப் பாதை மொத்தம் 56 மைல்கள் கொண்டது. உகந்தையிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் வாகூரவட்டை. பின்பு 7 மைல் தூரத்தில் குமுக்கனாறு. 12 மைல் தூரத்தில் நாவலடி. பின்னர் 11 மைல் தூரத்தில் வியாழை. 6 மைல் தூரத்தில் வள்ளி அம்மன் ஆறு. 8 மைல் தூரத்தில் கட்டகாமம். அடுத்து 8 மைல் தூரத்தில் கதிர்காமம் என மொத்தமாக காட்டுப்பாதை 56 மைல்களை உள்ளடக்கியது .

சுமார் 6 நாட்கள் இந்த காட்டுப் பயணத்தை அடியார்கள் மேற்கொள்வது வழமை. கடந்த 30 ஆம் தேதி திறந்து வைக்கப்பட்ட காட்டுப் பாதை வரும் 11 ஆம் திகதி மூடப்படுகிறது.

கதிர்காம கொடியேற்றம் 6 ஆம் திகதி நடைபெற்றது. இம்மாதம் 22ஆம் திகதி தீர்த்தம் இடம்பெறும் .

அகத்திய முனிவர் தொடக்கி அருணகிரியார் ஈறாகவும், யோகர் சுவாமி முதற்கொண்டு சித்தானைக்குட்டி வரை எண்ணிறைந்த சித்தர் பெருமக்கள் இன்றுவரை தம் பாதக் கமலங்களை பதித்து பவனி சென்ற பாதையில் கதிர்காமப் பாதயாத்திரையில் வருடாவருடம் நாமும் பயணிக்கின்றோம்.

இந்த விபரங்கள் “ஷேத்திராடனம்” எனும் நூலில் கூறப்பட்டுள்ளன.

1,000 வேல்களுடன், 1000 முருக பக்தர்கள் கதிர்காமம் நோக்கி பயணிக்கும் மாபெரும் வேல் யாத்திரை வரலாற்றில் இரண்டாவது தடவையாக, கடந்த முதலாம் திகதி உகந்தை மலைமுருகன்ஆலயத்தில் இருந்து சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையில் ஆரம்பமாகி கொடியேற்ற தினத்தில் கதிர்காமத்தை சென்றடைந்தது.



அனைத்து வேல் அடியார்களும் காவி வஸ்திரங்கள் தரித்து அணிவகுத்து சென்றமை பக்திப் பரவசத்தை ஊட்டியது. கதிர்காம கந்தனின் ஆடிவேல் உற்சவத்தில் கலந்துகொள்வதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பாதயாத்திரையை ஆரம்பித்த பக்தர்கள் கதிர்காம திருத்தலத்தை அடைந்து வருகின்றனர்.

கதிர்காமத் திருத்தலத்தில் அமைந்துள்ள பள்ளியில் கடந்த 6 ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் கொடியேற்றம் நடைபெற்றது. சர்வமத தலைவர்கள், கதிர்காமம் பஸ்நாயக்க நிலமே டிஷான் குணசேகர உள்ளிட்ட அதிகளவிலான பக்தர்களும் இதில் கலந்துகொண்டிருந்தனர். கதிர்காமக் கந்தனின் வருடாந்த ஆடிவேல் திருவிழாவில் இந்த ஆண்டுக்கான முதலாவது திருவீதி உலா ( பெரஹறா) கடந்த 6 ஆம் திகதி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

கதிர்காம கந்தனின் ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் ஜ/லை மாதம் 22 ஆம் திகதி மாணிக்க கங்கையில் நடைபெறவுள்ள நீர்வெட்டும் நிகழ்வுடன் நிறைவு பெறவுள்ளது.

# திருக்கோவிலில் தொல்லியல் வார விழிப்புணர்வுச் செயலமர்வு




(வி.ரி.சகாதேவராஜா)

திருக்கோவில் பிரதேசத்தில் தொல்லியல் வார விழிப்புணர்வுச் செயலமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

தொல்லியல் திணைக்களம் கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் வரும் 14 ஆம் திகதி வரையான காலத்தை தொல்லியல் வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக திருக்கோவில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் தொல்பொருள் இடங்கள் மற்றும் நினைவுச் சின்னங்களைப் பாதுகாப்பது தொடர்பாக விழிப்புணர்வுக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் தொல்பொருள் இடங்களைப் பாதுகாப்பது தொடர்பாக கிராம மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் குழுக்கள் அமைக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ.கந்தசாமி, காணிப் பிரிவின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் திருமதி.எஸ்.கஸ்தூரி மற்றும் தொல்பொருள் இடங்கள் அமைந்துள்ள கிராமசேவகர் பிரிவுகளான தம்பிலுவில் 1 மேற்கு, விநாயகபுரம் 3, கஞ்சிகுடியாறு, காஞ்சிரங்குடா, சாகாமம், தங்கவேலாயுதபுரம், சங்கமன் கிராமம் போன்ற இடங்களில் உள்ள கிராம சேவை உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மதகுருமார்கள், ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்திசங்க உறுப்பினர்கள், பாடசாலை மாணவர்கள் போன்றவர்கள் கலந்து கொண்டனர்.

# பாக்கு நீரினையை கடந்து சாதனை படைத்த ஹரிகரன் தன்வந்தை பாராட்டிய ஜனாதிபதி



(ஹஸ்பர் ஏ.எச்)

பாக்கு நீரினையை கடந்து சாதனை படைத்த 13 வயதான திருகோணமலையை சேர்ந்த ஹரிகரன் தன்வந்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அண்மையில் பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் இச்சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மார்ச் மாதம் முதலாம் திகதி பாக்கு நீரிணையைக் கடந்து சாதனை படைத்த மாணவனை ஜனாதிபதி பாராட்டியதுடன் கடலில் நீந்திய அனுபவங்களையும் கேட்டறிந்து கொண்டதாக அவரது பெற்றோர் தெரிவித்தனர்.




# பேரா உதவிக்கரங்கள் அமைப்பின் நிதி அனுசரணையில் ஒருநாள் இயற்கை முறை வீட்டுத்தோட்டச் செயலமர்வு




(நூருல் ஹுதா உமர்)

பேரா உதவிக் கரங்கள் அமைப்பின் நிதியனுசரணையில் நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தினால் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்திற்கு சிறி கோரக்கர் தமிழ் மகா வித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட 60 மாணவர்களுக்கான ஒரு நாள் இயற்கை விவசாய வீட்டுத் தோட்டச் செயலமர்வு நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் தலைவர் வினோஜ்குமார் தலைமையில் பாடசாலையின் விஜயகுமாரன் அரங்கில் இடம்பெற்றது.

இதன்போது பாடசாலையின் அதிபர் இளங்கோவனும், நியூ சன் ஸ்டார் இளைஞர் கழகத்தின் உப தலைவர் லூசாந்தும் இளைஞர் சேவை அதிகாரி டொஜானி மற்றும் பபேசா மற்றும் லோஜி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இச்செயலமர்வில் போது மண் பண்படுத்தல், விதைகள் நடுகை, வினைத்திறனான நீர்ப்பாசனம், வீட்டுத் தோட்ட முகாமைத்துவம், பீடைக்கட்டுப்பாடு முறைகள், நிலைபேறான வீட்டுத் தோட்ட முயற்சியாண்மை போன்ற செயற்பாடுகள் மாணவர்களுக்கு செயன்முறையாக காட்டப்பட்டன. இத்திட்டம் தொடர்ச்சியாக ஆறு மாதங்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டு, ஒவ்வொரு மாதமும் மாணவர்களுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்குவதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் தங்களது ஓய்வு நேரத்தில் பெற்றோருடன் சேர்ந்து வீட்டுத் தோட்டம் செய்வதால் நஞ்சற்ற உணவு உற்பத்தி மற்றும் ஒவ்வொரு வீட்டிலும் ஷரூபா 8000 க்கு மேல் சேமிக்க முடியும் என்பதை இலக்காகக் கொண்டு இச்செயலமர்வு திட்டமிடப்பட்டிருப்பது விசேட அம்சமாகும். இதன் போது 60 மாணவர்களுக்கு வீட்டுத் தோட்டம் செய்வதற்கான பயிர்க்கன்றுகள் மற்றும் விதைகள் வழங்கப்பட்டன.

# 14 துறைகளில் வரி வசூலிப்பை மேற்கொள்வதற்கு உத்தேசம்!

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

புதிதாக 14 துறைகள் மீது கவனம் செலுத்தி அவற்றிற்கு புதிய வரி வசூலிப்புக்களை மேற்கொள்ள கவனம் செலுத்தப்பட்டு வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இந்தத் துறைகள் மீது இதுவரை வரி வசூல் செய்வதற்கு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை எனவும், எனவே இனிமேல் அவை குறித்து கவனம் செலுத்தி வரி வசூலிப்போம் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

பாரிய அளவிலான கல்வி (டியூஷன்) நிறுவனங்கள், தனியார் பாடசாலைகள், தனியார் மருத்துவ சேவைகள், பொறியியல் சேவைகள், நில அளவை சேவைகள் உள்ளிட்ட 14 துறைகள் இதில் உள்ளடங்குவதாகவும், உள்நாட்டு இறைவரி திணைக்களம் அவர்களின் வருமானம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்தார். (ரெஜ-24)



# மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிமை சந்தித்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்

## இலங்கை வருமாறு அழைப்பும் விடுத்தார்

(ஹஸ்பர் ஏ.எச்)

மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிமை கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் நேற்று செவ்வாய்க்கிழமை கோலாலம்பூரில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

மலேசிய நாடாளுமன்ற உறுப்பினர் டத்தோஸ்ரீ சரவணன் முருகனின் விசேட அழைப்பின் பேரில் உத்தியோகபூர்வ பயணமாக ஆளுநர் செந்தில் தொண்டமான் மலேசியாவுக்குச் சென்றார்.



பிரதமர் அன்வர் இப்ராஹிம் உடனான சந்திப்பில் மலேசியா மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து ஆழமான கலந்துரையாடலை ஆளுநர் செந்தில் தொண்டமான் நடத்தினார்.

மலேசியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் வலுவான இருதரப்பு உறவுகளை உருவாக்குவதற்கான சாதகமான காரணிகள் குறித்தும் ஆளுநர் செந்தில் தொண்டமான் மலேசிய பிரதமருடன் கலந்துரையாடினார்.

அத்துடன், இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான அழைப்பையும் பிரதமர் இப்ராஹிமுக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் விடுத்ததுடன், இலங்கையில் வாழும் பெருந்தோட்ட சமூகத்தின் 200 வருட நினைவு முத்திரையையும் மலேசியப் பிரதமருக்கு வழங்கியிருந்தார்.

இதேவேளை, மலேசிய நிதியமைச்சர் அமீர் ஹம்சா, பிரதமர் துறை அமைச்சர் (இஸ்லாமிய சமய விவகாரங்கள்) நைம் ஆகியோரையும் மரியாதை நிமித்தமாக ஆளுநர் செந்தில் தொண்டமான் சந்தித்தார்.






# அரச வைத்தியசாலைகள் திட்டமிட்டு முடக்கம்!

## ஈ.பி.டி.பி. ஊடகப் பேச்சாளர்




தனியார் வைத்திய நிலையங்களை ஊக்குவிக்கும் நோக்கில் அரச வைத்தியசாலைகள் திட்டமிட்டு முடக்கப்படுவது தொடர்பாக, வடக்கு மாகாண வைத்தியத் துறையினர் மீதான மக்களின் நம்பிக்கை கேள்விக் குறியாகியுள்ளது, என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் இன்றையதினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில், சில தினங்களாக சாவகச்சேரி வைத்தியசாலையில் நடந்த விவகாரம் தொடர்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கருத்து என்ன? என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா அவர்களால் வைத்தியசாலையை மேம்படுத்தும் நோக்கில் எடுக்கப்பட்ட முயற்சிகள் அப்பகுதி மக்களால் பெரும் வரவேற்பை பெற்றன.

அதேசமயம் வைத்தியத் துறையின் மாகாண நிர்வாகம் அவர் பொறுப்பேற்று 20 நாள்களுக்குள் பல குற்றச்சாட்டுக்களையும் முன்வைத்தது.

ஆனால், நடைமுறை ரீதியாக தென்மராட்சி மக்கள் மாகாண நிர்வாகம் வைத்த குற்றச்சாட்டுக்கள் வேடிக்கையானவை, என விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் தாம் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அச்சுறுத்தியதாகவும் கூறுப்படுகின்றது.

இவ்வாறான சூழலில் பதில் வைத்திய அத்தியட்சகர் திரு. இராமநாதன் அர்ச்சுனா கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, எமது கட்சியின் செயலாளர் நாயகமும் யாழ் மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவருமான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலை விவகாரம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள், மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் அமையும் என்று திடமாகத் தெரிவித்துள்ளார் என்றும் குறிப்பிட்டார். (01)


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
JRide - Beyond the Road
JRide Driver: Drive & Deliver
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!